www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 12

தேர்வு எண்

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2024

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

## தமிழ்

பகுதி – I

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. பலவுள் தெரிக 8x1=8

1. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்.

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்........ தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

அ) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்

ஆ) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

3. பொருத்துக.

அ) ஆமந்திரிகை – 1. பட்டத்து யானை

ஆ) அரசு உவா – 2. மூங்கில்

இ) கழஞ்சு – 3. இடக்கை வாத்தியம்

ஈ) கழை – 4. எடை அளவு

அ) 3 1 4 2 ஆ) 4 3 2 1 இ) 4 1 2 3 ஈ) 3 4 1 4

4. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

5. "சாபவிமோசனம்", "அகலிகை" கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

6. பலர் துஞ்சவும் தான் துஞ்சான் – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பரணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை , கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

7. புகளூர் கல்வெட்டுகள் குறிப்பிடும் சங்ககால மன்னர்கள் யாவர்?

அ) பல்லவர் ஆ) பாண்டியர் இ) சேரர் ஈ) சோழர்

8. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் என்ற விதிப்படி புணரும் சொல்

அ) தலைக்கோல் ஆ) பூங்கோதை இ) புரிந்துடன் ஈ) வெண்குடை

II. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

9. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

10. அஞ்சத் தகுந்தன அஞ்சத்தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?

11. பின்னணி இசை படத்தின் காட்சி அமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

12. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

13. பருவத்தே பயிர் செய்– நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

ஆ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

14. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க:

வலம், வளம் அல்லது ஊண், ஊன்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

15. உறுப்பிலக்கணம் தருக:

வெகுளி (அல்லது) அறுத்து

16. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

அ) குதிரை, வேகம், ஓடு, தாவு ஆ) குழந்தை, நட, தளிர் நடை, விழு

17. மரபுச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.

அகலக்கால் (அல்லது) வழிவழியாக

18. தொன்மம் – குறிப்பு வரைக.

III. அ) எவையேனும் மூன்றனுக்கு விடைதருக. 3x4=12

19. இளங்கோவடிகள் குறிப்பிடும் நாட்டிய அரங்கின் அமைப்பை விளக்குக.

20. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

21. சூதும் கள்ளும் கேடு தரும் – திருக்குறள் வழி விவரிக்க.

22. சீனத்தில் யாங்சௌ என்ற பகுதியில் நடந்த நிகழ்வையும் அதன் மூலம் நாம் அறிய வேண்டிய கருத்தினையும் குறித்து எழுதுக.

23. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்.

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

24. சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

25. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

26. கீழ்க்காணும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தோடு ஏற்புடைய நயங்கள் நான்கினை எழுதுக.

*அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்*
*அவ்வாறே வான் கண்டேன்; திசைகள் கண்டேன்*
*பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?*
*பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்*
*சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்*
*சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி*
*இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்*
*எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?*

*– பாரதிதாசன்*

27. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

ஆ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

இ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்க குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

ஈ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

IV. ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக. 1x6=6

28. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

29. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

30. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மன ஓட்டத்தை நயத்துடன் எழுதுக.

V. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 1x4=4

31. "காய்நெல் அறுத்து" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com